# வேலைத்தலத்தில் ஒருவருக்கு 'கோவிட்-19' நோய்த்தொற்று இருந்தால் செய்யவேண்டிய காரியங்கள்

வேலைத்தளத்தில் யாருக்காவது 'கோவிட்-19' நோய்த்தொற்று இருந்தால், அல்லது 'கோவிட்-19'-ஐ அவர்கள் எதிர்கொண்டிருந்தால், கீழே சொல்லப்பட்டுள்ள படி-நிலைகளை நீங்கள் உடனடியாகப் பின்பற்றவேண்டும். அவர்களுக்குக் 'கோவிட்-19' இருப்பது உறுதிப்படுத்தப்படும்வரை காத்திருக்காதீர்கள்.

வேலைத்தலத்தில் உங்களுக்கு உதவுவதற்கானவையாகும் இந்தத் தகவல்கள். இருந்தாலும், நீங்கள் உங்களுடைய 'மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதாரத் திணைக்கள'(state or territory public health department)த்தின் அறிவுரைகளை அனைத்துவேளைகளிலும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

மூச்சு விடுவதில் சிரமம் போன்ற தீவிர நோயறிகுறிகள் ஒருவருக்கு இருந்தால் '000'-வை அழையுங்கள்.

## 1. அந்த நபரைத் தனிப்படுத்துங்கள்

அந்த நபரை மற்றவர்களிடமிருந்துத் தனிப்படுத்துங்கள். ஒரு-முறைப் பாவிப்பு முகக் கவசம் மற்றும் கைச் சுத்திகரிப்பான் போன்ற தகுந்த சரீரப் பாதுகாப்பு சாதனங்களையும் அவருக்கும் அவருக்கு உதவி செய்யும் மற்றவர்களுக்கும் நீங்கள் கட்டாயம் கொடுக்கவேண்டும்.

## 2. அறிவுரையை நாடுங்கள் மற்றும் ஆபத்துகளை மதிப்பீடு செய்யுங்கள்

உங்களுடைய 'மாநில அல்லது எல்லைப்பகுதி உதவி இணைப்'(state or territory helpline)பின் மூலம் அரசின் சுகாதார அறிவுரையை நாடுங்கள்,

அல்லது 'தேசிய கொரோனா வைரஸ் உதவி இணைப்'(1800 020 080)பினை அழையுங்கள்.

குறிப்பிட்ட நபருடைய தொடர்பு விபரங்கள் உங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். மற்றவர்களுக்குள்ள ஆபத்துக்களையும், சுத்தம் செய்யப்பட்டுக் கிருமிநீக்கம் செய்யப்படவேண்டிய பகுதிகள் யாவை என்பதைப் பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்வதற்காக, வேலைத்தலத்தில் அந்த நபர் இருந்த இடங்கள், அவருடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டவர்கள், தொடர்பு எவ்வளவு நேரத்திற்கானது என்ற விபரங்களைக் குறித்துக்கொள்ளுங்கள்.

உங்களுடைய 'மாநில அல்லது எல்லைப்பகுதி வேலைத்தலச் சுகாதார மற்றும் பாதுகாப்பு நெறியாளர்' (state or territory work health and safety regulator)- இற்கும் நீங்கள் அறிவிக்க வேண்டியிருக்கலாம்.

## 3. போக்குவரத்து

வீட்டிற்கு, தனிமைப்படுத்தப்படுவதற்கான ஒரு இடத்திற்கு, அல்லது தேவைப்பட்டால் மருத்துவ வசதி ஒன்றிற்கு அந்த நபரை அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதி அவருக்கு இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இயலுமான தருணங்களிலெல்லாம், நோய்த்தொற்றை மற்றவர்கள் எதிர்கொள்ளும் ஆபத்தைக் குறைந்தபட்சமாக்கத் தனிப்பட்ட சொந்தப் போகுவரத்து வசதியை அவர் பயன்படுத்த வேண்டும்.

## 4. சுத்திகரிப்பும் கிருமிநீக்கமும் செய்யுங்கள்

குறிப்பிட்ட நபர் பயன்படுத்திய இடங்கள் சுத்தம் செய்யப்பட்டுக் கிருமி நீக்கம் செய்யப்படும் வரை அந்த இடங்களை அடைத்து வையுங்கள். காற்றோட்டத்தை அதிகரிப்பதற்காக, இயன்றால் கதவுகளையும் சன்னல்களையும் திறந்து வையுங்கள்.

அலுவலகங்கள், குளியலறைகள், சமையலறைகள் மற்றும் பொது இடங்கள் போன்ற அந்த நபர் பயன்படுத்திய இடங்களையும்,

உபகரணங்களையும் முற்றிலுமாகச் சுத்தம் செய்துக் கிருமிநீக்கம் செய்யுங்கள்.

சுத்திகரிப்புப் பணியாளர்கள் தகுந்த சரீரப் பாதுகாப்பு சாதனங்களை அணிந்துகொள்ளவேண்டும், உதாரணமாக, கையுறைகள், பாதுகாப்புக் கண்ணாடிகள் மற்றும் ஒரு-முறைப் பாவிப்பு முன்-அங்கி (apron).

## 5. அந்த நபருடன் நெருங்கியத் தொடர்பில் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

‘கோவிட்-19’ நோய்த்தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒருவரது நெருங்கிய தொடர்புகளை அடையாளம் கண்டு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை ‘மாநில மற்றும் எல்லைப்பகுதி பொதுச் சுகாதாரப் பிரி’வினர் சொல்வார்கள்.

நோய்த்தொற்றுள்ள நபர் வேலைத்தலத்தில் யாருடனெல்லாம் நெருங்கிய தொடர்பில் இருந்தார், எவ்வளவு நேரத்திற்குதொ தொடர்பில் இருந்தார், மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் எந்த இடங்களிலெல்லாம் இருந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

மற்றவர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகளைப் பற்றியும், சுத்திகரிப்பும், கிருமி நீக்கமும் தேவைப்படக்கூடிய கூடுதல் இடங்களைப் பற்றியும் இது உங்களுக்கு அறியத்தரும்.

## 6. ஆபத்துக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மீள்பார்வையிடுங்கள்

உங்களுடைய தொழிலாளர்களுடன் கலந்து பேசி உங்களுடைய ‘கோவிட்-19’ ஆபத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மீள்பார்வை செய்து, மாற்றங்கள் தேவையா என்பதை மதிப்பீடு செய்யுங்கள்.

## உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும் நபர் சமீபத்தில் உங்களுடைய வேலைத்தலத்திற்கு வந்திருந்தால் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

உங்களுடைய வேலைத்தலத்திற்குச் சமீபத்தில் வந்திருந்த ஒரு தொழிலாளர் அல்லது வாடிக்கையாளர் போன்ற ஒருவர் அவருக்குக் 'கோவிட்-19' நோய்த்தொற்று இருப்பதாக உங்களுக்குத் தெரிவிக்கக்கூடும். எவ்வளவு சமீபத்தில் அவர் உங்களுடைய வேலைத்தலத்திற்கு வந்திருந்தார் என்பதையும் மற்றவர்களோடு அவர் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறாரா என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

தற்போது அவர்கள் உங்களுடைய வேலைத்தலத்தில் இல்லை என்றாலும், மேலே சொல்லப்பட்டுள்ள படி-நிலை நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ளவேண்டும். உங்களுடைய 'மாநில அல்லது எல்லைப்பகுதி உதவி இணைப்'(state or territory helpline)பிடமிருந்துஅறிவுரை நாடுங்கள்.

## என்னுடைய வேலைத்தலத்தை நான் மூட வேண்டியிருக்குமா?

சந்தேகிக்கப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட 'கோவிட்-19' நோய்த்தொற்றைத் தொடர்ந்து வேலைத்தலத்தை மூடவேண்டிய தேவை தானாகவே எழாது. நோய்த்தொற்றுள்ள நபர் உங்களுடைய வேலைத்தலத்தில் சில பகுதிகளுக்கு மட்டுமே சென்றிருந்தால், அல்லது நோய்த்தொற்றை மற்றவர்கள எதிர்கொண்டிருக்கக்கூடிய ஆபத்துக்கூறு குறைவு என்று சுகாதார அதிகாரிகள் உங்களுக்கு அறிவுரைத்தால், இதற்கு அனேகமாகத் தேவை இருக்காது.

உங்களுடைய வேலைத்தலத்தினை மூட வேண்டியிருக்குமா, இல்லையா என்பது அதன் அளவு, வேலையின் தன்மை, ஆட்களின்

எண்ணிக்கை மற்றும் கிருமித்தொற்று ஏற்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகள் ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

## குணமடைந்த பிறகு அல்லது நோய்க்காப்புத் தனிமைக்குப் பிறகு தொழிலாளர்கள் எப்போது வேலைக்குத் திரும்பலாம்?

‘கோவிட்-19’ இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தனிமைப்படுத்தப்பட்டத் தொழிலாளர்கள் முற்றிலும் குணமடைந்து, சுகாதார அதிகாரிகளால் குணமடைவுச் சான்று அளிக்கப்பட்ட பிறகே வேலைக்குத் திரும்பலாம்.

நோய்க்காப்புத் தனிமைக் காலத்தில், நோயறிகுறிகள் எதுவும் ஏற்படாத தொழிலாளர்கள் 14 நாள் காலத்தை முடித்த பிறகு வேலைக்குத் திரும்பலாம். வேலைக்குத் திரும்புவதற்காக மருத்துவச் சான்றிதழ் எதையும் கொடுக்கவேண்டிய தேவை இவர்களுக்கு இல்லை.

## மேலதிகத் தகவல்கள்

மேலதிகத் தகவல்களுக்கு Safe Work Australia website -இற்குச் செல்லுங்கள்